Registered No. M-4345.

யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-ம் வருஷம் செப்டெம்பர் மீ 26உ, வெள்ளிக்கிழமை. [இதழ் 28

"நடு நிலைமைச் சட்டம் மாற்றப்படவேண்டும்"

அமெரிக்க அரசியல் மந்திரியின் அபிப்பிராயம்.

நடுநிலைமைக் கொள்கையில் ஏற்பட்ட மாறுதல்கள்.

புதிய திருத்தங்களின் முக்கிய அம்சங்கள்.

இப்போது நடக்கும் யுத்தத்தில் அமெரிக்கா ஈடுபடவில்லை; எந்தப் பக்கத்திலும் சேராமல் நடுநிலைமையை வகித்திருக்கிறது. பிரிட்டனும், ரஷ்யாவும் தான், முக்கியமாக ஜெர்மனிக்கு எதிராகப் போர் புரிந்து வருகின்றன. இந்த இரண்டு நாடுகளுக்கும் அமெரிக்கா யுத்த சாமான்கள் 'சப்ளை' செய்துவருகிறது. ரஷ்யா பணம் கொடுத்து யுத்த சாமான்களை வாங்கிக் கொள்ளுகிறது. பிரிட்டன் முதலில் அப்படி வாங்கிக்கொண்டிருந்தது; பிறகு வாடகையாகவும், கடனாகவும் வாங்கிக்கொண்டு வருகிறது. நேர்முகமாக யுத்தத்தில் இறங்காவிட்டாலும், மறைமுகமாக, அமெரிக்கா யுத்தத்தில் நேசதேசத்தார்களுக்கு இம்மாதிரியான உதவி செய்துவருகிறது.

அமெரிக்கா நேர்முகமாக யுத்தத்தில் பிரவேசிப்பதற்கு ஒரு கஷ்டம் இருக்கிறது. அதுதான் நடுநிலைமைச் சட்டம் என்பது. அந்த சட்டத்தின்படி, அமெரிக்கா யுத்தத்தில் எந்த நாட்டின் உதவிக்காகவும் இறங்கக்கூடாது. இந்த சட்டம், இப்போதுள்ள நிலைமையை உத்தேசித்து, மாற்றப்படவேண்டும் என்ற அபிப்பிராயம் அமெரிக்கப் பொதுமக்களிடம் பலமாக இருக்கிறது; அரசாங்கத் தலைவர்களும் அதே அபிப்பிராயம் உடையவர்களாக இருக்கிறார்கள்.

சென்றவாரம், அமெரிக்காவின் அரசியல் மந்திரியாகிய மிஸ்டர் கார்டெல் ஹல், இதைப்பற்றி ஒரு முக்கியமான விஷயத்தை அறிவித்தார். நடுநிலைமைச் சட்டத்தை மாற்றிவிடவேண்டும் என்று தான் அபிப்பிராயப்படுவதாக, அவர் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். அவருடைய அபிப்பிராயம் நிறைவேற்றப்படுமானால், இந்த யுத்தத்தில் அது ஒரு மிக முக்கியமான விஷயமாகும். ஜெர்மனியின் கொடுங்கோன்மைக்கு எதிராகப் போராடிக்கொண்டு வரும் பிரிட்டனுக்கும், இதர நாடுகளுக்கும், அமெரிக்கா பூரண உதவி அளிப்பதற்கு இந்தச் சட்டம் ஒரு தடையாயிருக்கிறது. ஆகையால் இதை மாற்ற வேண்டும் என்று மிஸ்டர் கார்டெல் ஹல் சொல்லுகிறார்.

தனிப்பட்ட நிலைமை.

இந்த யுத்தம் சம்பந்தமாக, அமெரிக்காவில் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு அபிப்பிராயம் இருந்து வந்தது. முதலில், யுத்தத்தோடு யாதொரு சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாது என்ற அபிப்பிராயம் இருந்தது. அப்போது அமெரிக்கா தனிப்பட்டு நின்றது. 'யாரோ சண்டை போட்டுக்கொண்டு இருந்தால், அதில் நாம் பிரவேசித்து நஷ்டப்படுவானேன்?' என்று அமெரிக்கா நினைத்தது. பிரிட்டன் ஒரு சமயம் ஜெர்மனியுடன் சமாதானம் செய்துகொள்ளும் என்று அமெரிக்கா சந்தேகம் கொண்டது. ஹாலந்து, பெல்ஜியம் முதலிய நாடுகளும், பிரான்சும், வீழ்ச்சி யடைந்ததும், அமெரிக்க மக்களின் அபிப்பிராயத்தில் ஒரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. அவர்களுக்கு ஒரு விஷயம் விளக்கமாகப் புலப்பட்டது. ஹிட்லருடைய தாக்குதல் திட்டம் ஒரு நாட்டைப் பொறுத்தது அல்ல; ஒன்றன் பின் ஒன்றாக பல நாடுகளைத்தாக்கி, அவைகளைக் கைப்பற்றி, முடிவில் உலகத்தையே கைப்பற்ற வேண்டுமென்பது ஹிட்லரின் நோக்கம்.

பிரிட்டன் வீழ்ச்சியடைந்தால், அடுத்தபடியாக அமெரிக்கா ஜெர்மனியால் தாக்கப்படும் என்பதை அமெரிக்கர்கள் நன்றாக உணர்ந்தார்கள். இந்தக் காரணத்தினால், பிரிட்டனுக்கு சகல உதவியும் விரைவில் அனுப்பவேண்டும் என்று அமெரிக்க அரசாங்கத்தின் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட் முயற்சி செய்தார். அவருக்கு விரோதமாக, அமெரிக்கத் தலைவர் பதவிக்கு அபேட்சகராக நின்ற மிஸ்டர் வெண்டல் வில்கியும், இந்த அபிப்பிராயத்தை ஆதரித்தார். அமெரிக்கா, பிரிட்டனுக்கு யுத்த சாமான்கள் ஏராளமாக அனுப்ப ஆரம்பித்தது. பிரிட்டனுக்கும், இதர நேசநாடுகளுக்கும் யுத்த சாமான்கள் தாராளமாக அனுப்புவதற்காக, அமெரிக்கா வாடகை—கடன் சட்டத்தை நிறைவேற்றியது. முன்னர் குறிப்பிட்டபடி, வாடகையாகவும், கடனாகவும், அமெரிக்கா யுத்த சாமான்களைக் கொடுக்க ஆரம்பித்தது. இந்த யுத்த உதவிக்காக முதலில் 700 கோடி டாலர் (அமெரிக்க நாணயம்) ஒதுக்கிவைக்கப்பட்டது. பிறகு 598 கோடி டாலரை அமெரிக்கா மறுபடியும் ஒதுக்கிவைத்தது. பிரிட்டனுக்கும், ரஷ்யாவுக்கும் கப்பல்கள், ஆகாய விமானங்கள், 'டாங்கி'கள், இதர யுத்த சாமான்கள் எல்லாம் அமெரிக்கா அனுப்பிக்கொண்டு வருகிறது. இதல்லாமல் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் ஒரு முக்கியமான கட்டளையிட்டிருக்கிறார். அட்லாண்டிக் கடலில், அமெரிக்காவிலிருந்து ஐஸ்லாந்து வரைக்கும் ஜெர்மன் கப்பல்களாவது, ஆகாய விமானங்களாவது, நீர் மூழுகிக் கப்பல்களாவது காணப்பட்டால், உடனே அவைகளைச் சுட்டுவிடும்படி அவர் உத்தரவிட்டிருக்கிறார். இதனால் உண்மையில் அமெரிக்கா நடுநிலைமையை விட்டுவிட்டதாகச் சொல்லலாம்.

மாறுதலின் காரணங்கள்.

என்ன காரணத்தினால், அமெரிக்கா இப்படிச் செய்கிறது? முதலாவது, ஜெர்மனியின் நாஜிக் கொள்கையை அமெரிக்கா வெறுக்கிறது. இரண்டாவது, உலகத்தை அடிமைப்படுத்த விரும்பும் ஜெர்மனியின் பேராசையை ஒழித்துவிடவேண்டுமென்று அமெரிக்கா தீர்மானித்திருக்கிறது. மூன்றாவது, நடுநிலைமைச் சட்டத்துக்கு உட்பட்டு, பிரிட்டனுக்கும், நேச நாடுகளுக்கும் சகல யுத்த சாமான்களும் அனுப்புவதால், அமெரிக்கா தன்னுடைய பாதுகாப்புக்கு வழிதேடிக்கொள்ளுகிறது.

இந்த நடுநிலைமைச் சட்டம் என்பது என்ன? யுத்தத்தில் ஒரு கட்சிக்கு உதவி செய்யும்படியாக நடந்து கொள்ளக்கூடாது என்பதுதான் அதன் பொருள். உதாரணமாக, யுத்த சாமான்கள், ஆயுதங்கள், யுத்த காலத்தில் எந்த அமெரிக்கரும் ஏற்றுமதி செய்யக்கூடாது; யுத்தத்தில் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் பண சம்பந்தமான லேவாதேவி விஷயங்கள், பங்குகள் வாங்குதல், விற்றல் முதலியன செய்யக்கூடாது; யுத்தத்தில் ஈடுபட்ட நாடுகளின் கப்பல்களில் எந்த அமெரிக்கரும் பிரயாணம் செய்யக்கூடாது.

1939-ம் வருஷ முடிவில், நடுநிலைமைச் சட்டத்தில் ஒரு முக்கியமான மாறுதல் செய்ய வேண்டுமென்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் அமெரிக்க சட்டசபையைக் கேட்டார். யுத்த சாமான்கள் அனுப்புவது கூடாது என்ற சட்டத்தை எடுத்துவிட வேண்டும் என்று சொன்னார். ஏனென்றால், அச் சட்டத்தின்படி, இத்தாலி முதலிய நடுநிலைமை நாடுகளுக்கு அமெரிக்க யுத்த சாமான்களை

14541

அனுப்பலாம். அந்த நாடுகள் மூலமாக ஜெர்மனி யுத்த சாமான்களைத் தருவிக்கலாம். ஆனால் நான்கு பக்கம் கடலால் சூழப்பட்ட பிரிட்டன் அம்மாதிரி செய்வதற்கு சுலபமாக முடியாது. இதனால் அந்த சட்டம் சரியாக வேலை செய்யவில்லை என்று விளக்கமாகத் தெரிந்துவிட்டது. ஆகையால், பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கோரியபடி, அமெரிக்க சட்டசபை நடுநிலைமைச் சட்டத்தில் மாறுதல் செய்துவிட்டது.

தடை நீக்கப்பட்டது.

மாறுதலுக்குப்பிறகு இருக்கிற நடுநிலைமைச் சட்டத்தைப்பற்றி இப்போது கவனிப்போம். அதில் ஐந்து முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன. அமெரிக்க பிரசிடெண்டாவது, அமெரிக்க சட்டசபையாவது, வெளிப் பிரதேசத்தில் நடக்கும் சண்டை அமெரிக்காவின் அமைதியைப் பாதிப்பதாயிருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டால், அதைப் பற்றி சண்டையிடும் நாடுகளின் பெயர்களைக் குறிப்பிட்டு ஒரு பிரகடனம் செய்யவேண்டும். மற்ற நாடுகள் பிறகு சண்டையில் ஈடுபட்டால், அவைகளின் பெயர் பின்னால் சேர்க்கப்படும். 1937-ம் வருஷ சட்டத்தில் யுத்த சாமான் ஏற்றுமதித் தடை நீக்கப்பட்டது. இந்த திருத்தத்தின் கீழ், நடுநிலைமைச் சட்டத்தை உபயோகிக்காமல், ஒரு பிரகடனம் மூலமாக சண்டையிருக்கிறதென்ற விஷயத்தை அமெரிக்கா சட்டபூர்வமாகத் தெரிந்து, அதற்குவேண்டிய காரியங்களைச் செய்யலாம். இந்த சட்ட திருத்தம் பிரசிடெண்ட் ரூஸ்வெல்டினுடைய முயற்சியினால், அமெரிக்க சட்டசபை நிறைவேற்றியிருக்கிறது. பிரசிடெண்டும், சட்டசபையும் இந்த முக்கிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்றன.

சண்டைப் பிரதேசங்கள்.

இரண்டாவது விஷயம், சண்டைப் பிரதேசங்களைப் பற்றியது. அமெரிக்க மக்களின் பாதுகாப்புக்காக, சண்டைப் பிரதேசங்கள் இன்னின்னவை என்று பிரசிடெண்ட், அவசியம் நேர்ந்த போது கூறலாம் என்று சட்டம் கூறுகிறது. அந்தப் பிரதேசங்களுக்காவது அதன் வழியாகவாவது அமெரிக்கர்களும், அமெரிக்கக் கப்பல்களும் போகக்கூடாது. இந்த உத்தரவு ஆகாய விமானங்களுக்கும் உபயோகிக்கப்படும். இதை மீறுகிறவர்களுக்கு அபராதமும், சிறைத் தண்டனையும் கொடுக்கப்படும். சண்டைப் பிரதேசங்கள் எவை என்பதை பிரசிடெண்ட் திருத்தவும், மாற்றவும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால், அரசாங்கத்தை நடத்துபவர்களுக்குத் தான் எந்தெந்த சமயத்தில் எதெது அபாயப் பிரதேசங்கள் என்ற விஷயம், நன்றாகத் தெரியும்.

சண்டை நாடுகளுடன் வியாபாரம்.

நடு நிலைமைச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, அமெரிக்கக் கப்பல்கள் சண்டையில் ஈடுபட்ட நாடுகளுக்குச் சாமான்களாவது, பிரயாணிகளாவது கொண்டுபோகக் கூடாது என்பது மூன்றாவது விஷயம். ஆனால் சில குறிப்பிட்ட நாடுகளுக்கு மாத்திரம் கொண்டுபோகலாம். அபாய மில்லாத பிரதேசங்களுடன் யுத்த சாமான்கள் தவிர மற்ற சாமான்கள் சம்பந்தமாக வியாபாரம் செய்யலாம்; அது சம்பந்தமாக அமெரிக்கக் கப்பல்கள் தாராளமாகச் செல்லலாம். ஆனால் சண்டை நடக்கும் பிரதேசங்களில் எந்தக் காரணத்தை முன்னிட்டும் அமெரிக்கக் கப்பல்கள் பிரவேசிக்கக் கூடாது.

வடக்கு அட்லாண்டிக் கடலில் சண்டைப் பிரதேசத்துக்கு வெளியிலும் மத்தியதரைக் கடலிலும் அமெரிக்கக் கப்பல்கள் போகலாம். நடுநிலைமை நாடுகளாகிய ஸ்பெயின், நார்வே முதலிய நாடுகளுக்கு வியாபாரக் கப்பல்கள் செல்லலாம். ஆனால் இந்தப் பிரதேசங்களில் சண்டை செய்யும் நாடுகளுக்குப் போகக்கூடாது.

பொருள் சம்பந்தமான நடவடிக்கைகள்.

சண்டை நாடுகள் என்று பிரகடனப் படுத்தப்பட்ட நாடுகளிடம் கடன் பத்திரங்கள், நாணய மாற்றுப் பத்திரங்கள், முதலிய எதுவும் விற்கவோ, வாங்கவோ கூடாது என்பது நான்காவது விஷயம். இருக்கிற கடன்களைப் புதுப்பிப்பது அல்லது சரிப்படுத்துவது மாத்திரம் பிரத்தியேகமாக அனுமதிக்கப்படும். சண்டை போடும் நாடுகளில் இருக்கும் யாருக்கும், யுத்த சாமான்கள், வெடிகுண்டு சாமான்கள், தளவாடங்கள் முதலியன விற்கக் கூடாது என்று சட்டத்தில் தனியாகக் குறிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்கக் கொடியைச் சட்ட விரோதமாக உபயோகித்தல்.

அமெரிக்காவுக்குச் சம்பந்தமில்லாத கப்பல்கள் அமெரிக்காவின் கொடியைப் பறக்கவிடுவது சட்ட விரோதமானது என்பது நடுநிலைமைச் சட்டத்தின் ஐந்தாவது முக்கியமான விஷயம். எந்தக் கப்பல் இந்த விதியை மீறி அமெரிக்கக் கொடியைப் பறக்க விடுகிறதோ, அது அமெரிக்கக் கடற் பிரதேசங்களில் மூன்று மாதங்கள் வரையில் வரக்கூடாது. சென்ற உலக மகா யுத்தத்தில் சண்டை நாடுகளின் வர்த்தகக் கப்பல்கள் அமெரிக்கக் கொடியை பறக்க விட்டுக் கொண்டு எதிரிகளிடமிருந்து தப்பித்துகொண்டு செல்வது வழக்கம். இதனால், ஜெர்மன் நீர்முழுகிக் கப்பல்கள் ('சப்மரீன்'கள்) அமெரிக்கக் கப்பல்களையே தாக்குவதற்கு இடம் ஏற்பட்டது.

இந்தப் புதிய விதியினால், சண்டையில் சம்பந்தப்பட்ட நாட்டுக் கப்பல்கள் அமெரிக்கக் கொடியை உபயோகப்படுத்துவது கூடாது என்று எச்சரிக்கை செய்யப்பட்டது. ஆனால் இதை மீறி நடப்பதற்கு விதிக்கப்பட்ட தண்டனை இவ்வளவு கடுமையானதாகத் தெரியவில்லை. யுத்தம் முடியும் வரை, சட்ட விரோதமாக அமெரிக்கக் கொடியை உபயோகப்படுத்தும் கப்பல்கள் அமெரிக்கத் துறை முகங்களில் பிரவேசிக்கவே கூடாது என்று வைத்திருந்தால் நன்றாயிருக்கும்; அல்லது வேண்டுமென்றே அக்கொடியை உபயோகப்படுத்துவதற்கு உடந்தையாயிருக்கும் நாடுகளின் கப்பல்கள் எல்லாம் அமெரிக்கக் கடற் பிரதேசங்களில் பிரவேசிக்கக்கூடாது என்ற தண்டனை விதித்தாலும் நன்றாயிருக்கும். ஆனால் இதில் ஒரு கஷ்டம் இருக்கிறது. அமெரிக்கக் கடற் பிரதேசங்களுக்கு வெளியில், சட்ட விரோதமாக அமெரிக்கக் கொடியைப் பறக்கவிட்டுச் செல்லும் கப்பல்களை நேராக தடுப்பது என்பது முடியாத காரியம்.

நடுநிலைமை சட்ட நோக்கம்.

அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபடுவதைத் தடுப்பதற்காக, நடுநிலைமைச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இப்போது அமெரிக்க நடுநிலைமை நாடாக இருக்க வேண்டும் என்று கட்டுப்படுத்துவது முடியாத காரியம். சண்டை நாடுகள் அடிக்கடி அகில தேசீய சட்டங்களுக்கு விரோதமாகக் காரியங்கள் செய்து, அமெரிக்காவை யுத்தத்தில் இறங்கும்படியான ஒரு கட்டாய நிலைமையை ஏற்படுத்தலாம். கண்டிப்பான நடுநிலைமைக் கொள்கையை அமெரிக்கா பின்பற்றி வருமானால், அதனால் தன்னுடைய உரிமைகளை இழந்துகொண்டே வரும்படி நேரிடும்; பிறகு தன்னுடைய அமைதிக்கே அபாயம் வரும்படியான நிலைமை ஏற்படும்.

நடுநிலைமைச் சட்டம் ஏற்படுத்தியதற்குச் சில காரணங்களுண்டு. அவையாவன:—கடலில் நடைபெறும் யுத்தத்தைப்பற்றி அமெரிக்காவில் விவாதங்கள் உண்டாவதை தடுத்தல்; யுத்த காலத்தில் சண்டை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் திடீரென்று சாமான்கள் அதிகமாக விலையேறும் தீமையை விலக்குதல்; சண்டை நாடுகளுடன் பொருளாதாரத் தொடர்பு வைத்துக்கொள்வதை நீக்குதல். இந்தக் காரணங்களெல்லாம் இப்போதிருக்கும் நெருக்கடியான நிலைமைக்குப் பொருந்ததாயில்லை.

இப்போது உள்ள தடை.

ஆகையால்தான் அமெரிக்க அரசியல் மந்திரி, மிஸ்டர் கார்டெல் ஹல், நடுநிலைமை சட்டத்தை மாற்ற வேண்டும் என்று கூறியிருக்கிறார். பிரிட்டனுக்கும் ரஷ்யாவுக்கும் எல்லாவித உதவிகளும் அமெரிக்கா அனுப்புவதற்கு இச்சட்டம் ஒரு தடையாயிருக்கிறது. பலவித உதவிகள் சீக்கிரமாகவும், ஏராளமாகவும் அனுப்பப்பட்டால்தான், ஜெர்மனியர்களுடைய யுத்த முஸ்தீப்புகளைவிட, பிரிட்டனும், ரஷ்யாவும், அதிகமான யுத்த முஸ்தீப்புகள் பெற அனுகூலமாயிருக்கும். எவ்வளவு சீக்கிரம் இந்த நிலைமை ஏற்படுகிறதோ, அவ்வளவும் ஜெர்மனியுடன் போராடும் நேசநாடுகளுக்கு நன்மையான காரியமாகும்.

நடுநிலைமைச்சட்டத்தை உடனே ரத்துசெய்து விட வேண்டும் என்று அமெரிக்கக்கப்பற்படை மந்திரி கர்னல் நாக்ஸ் சென்ற செவ்வாய்க்கிழமையன்று கூறினர். இந்த கூட்டத்தினல் அமெரிக்காவின் முயர்ச்சிகள் தடைப்படுகின்றன என்று அவர் சொன்னர். அமெரிக்காவை யுத்தம் நெருங்க வேண்டாமென்றல், அமெரிக்காவுக்கு வெகு தூரத்திலேயே யுத்தம் இருக்கவேண்டுமென்றல், சகல உதவியும் ரஷ்யாவுக்கு விரைவில் அனுப்பவேண்டும் என்று கர்னல் நாக்ஸ் விளக்கிக்காட்டினர். இதற்காக, நடுநிலைமைச் சட்டத்தை ரத்து செய்துவிட்டு, அமெரிக்காவின் பிரதம தளகர்த்தர் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட், தடையில்லாமல் காரியங்கள் நடத்துவதற்கு சுதந்திரம் கொடுக்கவேண்டும் என்று கடற்படை மந்திரி குறிப்பிட்டார்.

இரானில் நடந்த அரசியல் மாறுதல்.

நேசதேசத்தார்களின் முன்னேற்றமும், நாட்டு மக்களின் வரவேற்பும்.

பழைய இரானிய அரசரும், ஜெர்மனியின் நட்பும்.

இரானின் தலைநகரமாகிய டெஹரானில் பிரிட்டிஷ் துருப்புகளும், ரஷ்ய துருப்புகளும் பிரவேசித்த பிறகு, சில முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. பழைய இரானிய அரசரின் ஆட்சியின் மேல், நாட்டு மக்களுக்கு வெறுப்பு அதிகரித்தது. இரானிய சட்டசபை பழைய அரசரைக் குற்ற விசாரணை செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறது. இந்த தொந்தரவுகள் வரும் என்று எதிர்பார்த்து, பழைய அரசர் தன்னுடைய சொத்துக்களை எல்லாம் தன்னுடைய மகனுகிய புதிய அரசருக்குக் கொடுத்துவிட்டார். அந்த சொத்துக்கள் தேசீய சொத்துக்களாகக் கருதப்படும். சகல அரசாங்க இலாகாக்களும் இனிமேல் ஒழுங்காக நடத்தப்படும் என்று நியாய இலாகா மந்திரி தெரிவித்திருக்கிறர்.

இரானின் உள்நாட்டு நிலைமை இன்னும் முழு அமைதியை அடையவில்லை. ஆனல், இரானிய மக்கள், பிரிட்டிஷாரும் ரஷ்யர்களும் தங்கள் நாட்டில் பிரவேசித்ததின் நோக்கத்தைப் பாராட்டுகிறர்கள். சிரியாவிலும், இராக்கிலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் நல்லெண்ணம் விளக்கமாகக் காட்டப்பட்டது. சிரியாவுக்குச் சுதந்தரம் கொடுக்கப்பட்டது. இராக்கினுடைய சுதந்தரத்துக்கு யாதொரு பங்கமும் வராமல் பிரிட்டிஷார் நடந்து கொண்டார்கள். இதற்கும், ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளின் நிலைமைக்கும் உள்ள வித்தியாசத்தை இரானிய மக்கள் நன்ருக அறிந்துகொண்டிருக்கிறர்கள்.

நேச தேசத் துருப்புகள் இரானில் ஆகஸ்ட் மாதம் 25-ந் தேதி பிரவேசித்தன. பிரவேசித்ததன் காரணங்களும், பிரவேசித்த பின் நடந்த விஷயங்களும் மேஜர் ஜெனரல் ஜி. என். மோல்ஸ்வொர்த், சென்ற சனிக்கிழமை (செப்டெம்பர்மீ 20-ந் தேதி) செய்த 'ரேடியோ' பிரசங்கத்தில் விவரமாகக் கூறப்பட்டிருக்கின்றன. அவர் பிரிட்டிஷ் பட்டாளத்தின் உதவி பிரதம தளகர்த்தர். அவருடைய பிரசங்கத்தின் சுருக்கம் பின் வருமாறு :—

நேச தேசத் துருப்புகள் இரானில் பிரவேசித்த பிறகு, பல சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்ருக நடைபெற்றன. இதனல் இரானைப் பற்றி பலருடைய மனத்தில் குழப்பம் ஏற்பட்டிருக்கலாம். நடந்த சம்பவங்களை வரிசையாகக் கவனித்தால் யாதொரு குழப்பத்துக்கும் இடம் இருக்காது.

ஜெர்மனியின் சூழ்ச்சிகள்.

ஜெர்மனி ரஷ்யாவைத் தாக்குவதற்கு சில வாரங்களுக்கு முன், இரானில் சில சூழ்ச்சிகள் செய்துகொண்டு வந்தது. பொதுவாக நேச தேசத்தார்களும், சிறப்பாக பிரிட்டனும், இந்தியாவும், இதைப் பற்றிக் கவலை எடுத்துக் கொள்ளும்படி நேர்ந்தது. இராக்கிலும், சிரியாவிலும், ஜெர்மானியர்களும் இத்தாலியர்களும் ஆதிக்கம் பெற முயற்சி செய்தார்கள். ஆனல் பிரிட்டிஷ் துருப்புகளும் இந்தியத் துருப்புகளும், இதைக் கெடுத்தன. இராக்கில் சட்டபூர்வமான அரசாங்கம் மறுபடியும் ஏற்படுத்தப்பட்டது. சிரியா, விஷி அரசாங்கத்தின் துரோகத்திலிருந்து தப்புவிக்கப்பட்டது. இரண்டு முஸ்லீம் நாடுகளில் செய்த தந்திரங்கள் பலிக்காமற் போகவே, அச்சு நாட்டு வேவுகாரர்களும், கூலியாட்களும் இரானில் புகுந்துகொண்டார்கள்.

இரானில் இதற்கு முன்பே 2,000 ஜெர்மானியர்களுக்குமேல் முக்கியமான இலாகாக்களில் இருந்தார்கள். இதனல் ஏற்படும் தீமைகள், இரானிய அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன. இரானிய அரசர் ஷா இதைச் சட்டை செய்யவேயில்லை. ஜெர்மனி ரஷ்யாவைத் தாக்கிய பிறகு, இரானில் ஜெர்மன் சூழ்ச்சிகள் அபாயம் விளைவிப்பதாய் இருந்தன. கிழக்கு நோக்கி ஜெர்மனி செல்வதற்கு இரான் ஒரு உதவியாக ஏற்படும் போல் இருந்தது. இதனல் ரஷ்யாவும் இதில் கவனம் செலுத்த ஆரம்பித்தது.

பிரிட்டிஷ் அரசாங்கம், இந்தியாவிலும், மத்திய கிழக்கு அரங்கத்திலும் உள்ள முஸ்லீம் நாடுகள் எல்லாம் இரானில் நடக்கும் சம்பவங்களைத் தடுக்க வேண்டும் என்று நினைத்தன. ஆகையால், இரானில் உள்ள ஜெர்மானியர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டுமென்று இரானிய அரசர் கேட்டுக்கொள்ளப்பட்டார். பிரிட்டனும், ரஷியாவும், தங்களுடைய ஸ்தானீகர்கள் மூலமாக அநேக தடவை கேட்டும், இரானிய அரசர் இணங்கவில்லை. இரானிய அரசர் ஜெர்மனியுடன் பொருளாதார சம்பந்தம் வைத்திருந்ததாகத் தெரிந்தது. தன்னுடைய நாட்டுப்பொருள்களை ஜெர்மனிக்குக் கொடுத்துவிட்டு, அங்கிருந்து தொழிற்சாலை யந்திரங்களை வாங்கி தன்னுடைய சொந்த சொத்துக்களில் அவற்றை உபயோகித்து லாபம் சம்பாதிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேச தேசத்தார்களின் நோக்கம்.

இரானிய அரசர் ஜெர்மானியர் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்போவதில்லை என்று தெரிந்ததும், நேச தேசத்தார்கள் தாமே அக்காரியத்தைச் செய்வதென்று துணிந்தார்கள். பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும், ரஷியத் துருப்புகளும், ஆகஸ்டு மாதம் 25-ந் தேதி இரானில் பிரவேசித்தன. அவர்களுடைய நோக்கம் மூன்று. அவை யாவன :—

(1) இரானில் உள்ள ஜெர்மானியர்களையும், இதர எதிரிகளையும் நாட்டைவிட்டு அப்புறப்படுத்தல் ;

(2) இரானில் உள்ள முக்கியமான 'பெட்ரோல்' எண்ணெய்க்கிணறு பிரதேசங்களைப் பாதுகாத்தல் ;

(3) காகசஸ் பிரதேசத்திலிருந்து வடக்கு இரான் வரைக்கும் உள்ள போக்கு வரவு சாதனங்களைப் பாதுகாத்தல்.

கடைசி இரண்டு விஷயங்களும் முதல் விஷயத்தோடு சம்பந்தப்பட்டிருந்தன. ஜெர்மானியர்களை அப்புறப்படுத்தியிருந்தால், மற்ற இரண்டு விஷயங்களைப்பற்றி ஏதாவது ஒருமுடிவுக்கு வந்திருக்கலாம்.

நேசதேசத் துருப்புகள் பிரவேசித்ததை இரானிய மக்கள் வரவேற்ருர்கள். அவைகளோடு ஒத்துழைப்பதற்கு ஆசைப்பட்டார்கள். இரானியப் பட்டாளமும் நேசதேசத்துருப்புகளை எதிர்த்துப் போர்புரிய விரும்பவில்லை. சண்டை போடுவதை நிறுத்தும்படி இரானிய அரசர் தம் துருப்புகளுக்குக் கட்டளையிட்டார். உடனே நேசதேசத்துருப்புகள் முன்னேறிச்செல்வதை நிறுத்திவிட்டன.

பிறகு நேசதேசத்தார் கேட்டவிஷயங்களை இரானிய அரசர் தம்முடைய புதிய மந்திரி சபைக்கு அறிவித்தார். மந்திரிகள் கேட்டவற்றை ஒப்புக்கொண்டார்கள். ஆனல் அரசர்மாத்திரம் முட்டுக்கட்டைபோட ஆரம்பித்தார். அரசருடைய ஆட்சேபனைக்கு எதிராக மந்திரிகள் செல்ல முடியவில்லை. அரசாங்கமே ஒரு குழப்பத்தில் விழுந்துவிடும்போல் இருந்தது.

டெஹரானில் பிரவேசம்.

இரானிய அரசாங்கம் ஜெர்மானியர்களை அப்புறப்படுத்த முடியாமல் இருந்ததால், நேசதேசத்தார்கள் இரானின் தலைநகராகிய டெஹரானில் பிரவேசிக்க

ஆரம்பித்தார்கள். இந்த சமயத்தில் அரசர் இரானிய ராஜ்யத்தைக் கைவிட்டுவிட்டுப் போய்விட்டார். அதற்குக் காரணம் தமக்கும் மந்திரிகளுக்கும் இருந்த அபிப்பிராயபேதம்தான். அரசகுமாரர் சிம்மாசனம் ஏறினர்.

திடீரென்று அரசியல் மாறுதல் ஏற்பட்டதனால், நேசதேசத் துருப்புகளின் நிலைமை மாற்றப்படவில்லை. புதிய அரசாங்கத்துக்கு வேண்டிய உதவியை அத்துருப்புகள் அளித்தன. ஜெர்மானியர்கள் குழப்பத்தை அதிகரிக்கும்படி செய்த முயற்சிகளெல்லாம் அழிக்கப்பட்டன.

புதிய அரசாங்கம் நேசதேசத்தார்களுக்கு தன் கடமைகளை எவ்வளவதூரம் செய்யப்போகிறதென்பது இனிமேல்தான் தெரியவரும்.

இந்தியாவின் யுத்த முயற்சி.

மிஸ்டர் எல்.எஸ். அமெரியின் பாராட்டு

டில்லி மகாநாட்டின் முக்கியம்

இந்தியாவினுடைய யுத்த முயற்சியைப் பாராட்டி, பிரிட்டிஷ் அரசாங்கத்தில் இந்திய மந்திரியாயிருக்கும் மிஸ்டர் எல் எஸ். அமெரி, அப்ர்டீனில் சென்ற செவ்வாய்க்கிழமை ஒரு பிரசங்கம் செய்திருக்கிறார். அவர் கூறியதன் சுருக்கமாவது :—

எரீட்ரியாவிலும், அபிசீனியாவிலும், இராக்கிலும், இந்தியப் பட்டாளங்கள் பெரிய வெற்றிகளைப் பெற்றிருக்கின்றன. இரான் மூலமாக ரஷ்யாவுக்கு உதவி அனுப்புவதற்கு, சிரியாவில் செய்யவேண்டிய வேலையில் பேருதவி செய்திருக்கின்றன. ரஷ்யாவுக்கு உதவி செய்யவேண்டியது நமது கடமை என்பது தெரிந்தவிஷயம். இந்த உதவி சீக்கிரமாகப் போய்ச் சேருவதற்காக, இரான் மூலமாக போக்குவரவு சாதனங்களைத் திருத்தி, பலப்படுத்தவேண்டும். இந்த வேலை பெரும்பாலும் பிரிட்டனின் பொறுப்பாகும். இதில் இந்தியா பெரும்பங்கு எடுத்துக்கொண்டு திறமையாக உதவிசெய்து வருகிறது. டில்லியில் நடந்த மகாநாட்டில், இதர குடியேற்ற நாடுகளுடன் சேர்ந்து, இந்தியா ஒரு ஒத்துழைப்புத் திட்டம் தயாரித்திருக்கிறது. அதன்படி, எவ்வளவு சீக்கிரமாக வெடிகுண்டு சாமான்கள் முதலியன செய்வதற்கு அந்தந்த நாடுகள் உதவிசெய்ய முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த வேலை இப்போது தொடர்ந்து நடந்துவருகிறது. முடிவில் வெற்றிபெறுவதற்கு, அதிகரித்துக்கொண்டு வரும்படியான இந்த யுத்த முயற்சி பெரிதும் உபயோகப்படும் என்பதில் சந்தேகமில்லை.

ரஷ்யாவில் யுத்தம்.

கீயப் வீழ்ச்சி : லெனின் கிராடின் எதிர்ப்பு.

சுமார் மூன்று மாதங்களுக்குமுன், ரஷ்ய மாகாணமாகிய யூக்ரெயினின் தலை நகரமாகிய கீயப்பை, தாங்கள் கைப்பற்றுவதற்கு வழி திறந்திருக்கிறது என்று ஜெர்மானியர்கள் கூறினார்கள். ஆனால் இப்போதுதான் அந்த நகரம் ஜெர்மானியர்களால் கைப்பற்றப்பட்டது. கீயப்பை ரஷ்யர்கள் இழந்தது ஒரு கவலைக்கிடமான விஷயம்தான். ஏனென்றால் வடக்கு யூக்ரெயினைப் பாதுகாக்கும் கேந்திர ஸ்தானமாக அது இருந்தது. ஆனால் இந்த விஷயம் எதிர்பார்த்ததுதான். மார்ஷல் பூடென்னி தன் துருப்புகளுடன் பின்வாங்கிச் சென்றபோதே, இந்த நிலைமை எதிர்பார்க்கப்பட்டது.

இப்போது ரஷ்யர்கள் ஒரு அபாயத்தைத் தடுக்க வேண்டும். ஜெர்மானியர்களின் அடுத்த முயற்சி கார்கோவ் என்ற முக்கிய பட்டணத்தைப்பிடிப்பது. ஒடெஸ்ஸா பட்டணம் ஜெர்மானியர்களையும், ருமேனியர்களையும் எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கிறது. மத்தியப்பகுதியில், லெனின் கிராட் திறமையோடு பாதுகாக்கப்பட்டுவருகிறது.

இது இப்படியிருக்க, பிரிட்டன், அமெரிக்கா, இந்தியா முதலிய நாடுகளிடமிருந்து ரஷ்யாவுக்கு யுத்த சாமான்கள் போய்க்கொண்டேயிருக்கின்றன. இவைகள் ஜெர்மனியை எதிர்த்துப் போர்புரிவதற்கு மிகவும் உதவியாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

துருக்கியும், பல்கேரியாவும்.

ஜெர்மனியின் சூழ்ச்சிகள்.

அடுத்தபடியாக, கிரைமிய தீபகற்பத்தின்மேல் ஜெர்மனி தன் கண்ணோட்டத்தைச் செலுத்தும் என்று தெரிகிறது. பல்கேரிய அரசர் பாரிஸ் ஹிட்லரைப் பார்க்கச் சென்றிருக்கிறார். பல்கேரியாவைத் தன்னுடைய முயற்சிக்குக் கையாளாக்கி ரஷ்யாவைத் தாக்கச்செய்ய வேண்டுமென்பது ஹிட்லரின் நோக்கம். துருக்கி என்ன செய்யுமோ என்ற அச்சம் ஒரு பக்கமும், அதனால் ஒரு அபாயமும் நேராது என்ற அமைதி ஒரு பக்கமும் ஜெர்மனிக்கு இருந்து வருகிறது. துருக்கி ஒரு கஷ்டமான நிலைமையில் இருக்கிறது. துருக்கியைச்சுற்றி ஜெர்மனி வளைத்துக்கொண்டது. துருக்கி தாக்கப்பட்டால் அதற்குச் சகல உதவியும் அளிப்பதாக பிரிட்டனும், ரஷ்யாவும் வாக்களித்திருக்கின்றன. அடுத்த ஆறு வாரங்கள் துருக்கியின் சரித்திரத்தில் நெருக்கடியானவையாகும்.

வாரச் செய்திக் குறிப்புகள்.

1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் விமானப்போர்.

சென்றவாரம், பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் ஜெர்மனியின் தென்மேற்கு பாகங்களையும் வடமேற்கு பாகங்களையும் பலமாகத் தாக்கின. ஜெர்மனியின் தலைநகரமாகிய பர்லினும், பிராங்போர்ட்டும் முக்கியமாகத் தாக்கப்பட்டன.

பிரான்சில், பலோன் என்ற கப்பல்கட்டும் சாலையின் மேல் பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப்போட்டன. உயிர்ச்சேதமொன்றுமில்லை.

ஒரு ஜெர்மன் விமானம் இழக்கு ஆங்கிளியா என்ற பிரிட்டிஷ் மாகாணத்தின் மேல் பறந்து சில வெடிகுண்டுகளைப் போட்டது.

ஜெர்மன் விமானத்தாக்குதலால், பிரிட்டனில் உண்டான சேதத்தைப்பற்றிய விவரங்கள், பிரிட்டிஷ் விமான மந்திரி சபையால் வெளியிடப்பட்டது. சென்ற ஆகஸ்ட்டு மாதம், விமானத்தாக்குதலால் 169 பேர் கொல்லப்பட்டார்கள்; 136 பேர் காயப்படுத்தப்பட்டார்கள். ஒரு வருஷத்திற்கு முன் அதே மாதத்தில் கொல்லப்பட்டவர்கள் 1,085; காயமடைந்தவர்கள் 1.265; சென்ற இலை உதிர்காலத்திலிருந்து இதுவரைக்கும் கொல்லப்பட்டவர்களின் கணக்கு பின்வருமாறு :—

1940-ம் ஆ	அக்டோபர் மீ	6,335.
,,	நவம்பர் மீ	4,751.
,,	டிசம்பர் மீ	3.828.
1941-ம் ஆ	ஜனவரி மீ	1,539.
,,	பிப்ரவரி மீ	793.
,,	மார்ச்சு மீ	4,298.
,,	ஏப்ரல் மீ	6,068-
,,	மே மீ	5,394.
,,	ஜூன் மீ	399.
,,	ஜூலை மீ	501.
,,	ஆகஸ்ட் மீ	169.

இந்த வருஷ ஆரம்பத்திலிருந்து ஆகஸ்ட்மாதம் வரைக்கும், பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர்மன் விமானங்களுக்கு உண்டாக்கிய சேதத்தைப்பற்றி,

பிரிட்டிஷ் குருய்ஸர் டேங்குகள்!

பிரிட்டிஷ் படையைச் சேர்ந்த பிரசித்திபெற்ற வீரர்களால் ஓட்டப்படும் குருய்ஸர் டேங்குகள். இவைகள் அதிவேகமாக ஓடக்கூடியவை. இவைகள் தற்போதைய யுத்தத்துக்கு மிகவும் அவசியமா யிருக்கின்றன.

விமானப்படை உதவித்தளகர்த்தர், மிஸ்டர் ஜே.ஒ. ஆண்டுரூஸ் சிலவிவரங்களை வெளியிட்டிருக்கிறார். பிரிட்டிஷ் விமான நஷ்டத்தைவிட ஜெர்மனிக்கு மூன்றுபங்கு அதிகமான நஷ்டம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. விமான எதிர்ப்பு பீரங்கிகளும், இதர பாதுகாப்புப்படைகளும் 1,000-க்கு மேற்பட்ட ஜெர்மன் விமானங்களை நாசமாக்கியிருக்கின்றன. நஷ்டமடைந்த பிரிட்டிஷ் விமானங்கள் சுமார் 300 இருக்கும். பகல் வேளையில் போர்புரிந்த பிரிட்டிஷ் விமானங்கள், 636 எதிரிவிமானங்களைச்சுட்டு வீழ்த்தின. யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து, பிரிட்டிஷ் கடற்கரையோர விமானப்படை 710 எதிரிக்கப்பல்களைத் தாக்கியிருக்கிறது. முழுகடிக்கப்பட்ட கப்பல்களின் மொத்த எடை 2,40,000, டன்கள்.

ஜெர்மனியின் மீது பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கியதைப்பற்றிய சில விவரங்கள் இப்போது வெளியிடப்பட்டன. 1941-ம்ஞு ஜூன்மீ 14உயிலிருந்து செப்டெம்பர்மீ 15உவரையில் கீழ்க்கண்ட முக்கிய பட்டணங்கள் அவைகளுக்கு எதிராகக் குறிப்பிட்ட தடவைகள் தாக்கப்பட்டன :—

கலோன்	24
பிரெமென்	16
பர்லின்	14
கீல்	14
பிராஸ்போர்ட்	11
மான்ஹீம்	11
டூசல்டார்ப்	13
டூயிஸ்பர்க்	10
ஹனோவர்	9
எம்டன்	8

எல்லா ஜெர்மன் பட்டணங்களும், இந்த மூன்று மாதத்தில் 200 தடவை தாக்கப்பட்டன. இதில் பலமான தாக்குதல் 120 தடவையும், மிக்க பலமான தாக்குதல் 44 தடவையும் நடத்தப்பட்டது.

2. ஆப்பிரிக்காவும் மத்தியதரைக் கடலும்.

மத்தியதரைக் கடலிலுள்ள பல எதிரிக் கப்பல்கள் பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டன. அபிசீனியாவில் சில இடங்களில் வெடி குண்டுகள் போடப்பட்டன.

3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

அமெரிக்க அரசாங்கம் அமெரிக்க வர்த்தகக் கப்பல்களை யுத்த முஸ்தீப்பு செய்யும் விஷயமாக ஆலோசனை செய்துகொண்டு வருகிறது என்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் தெரிவித்திருக்கிறார். "பிங்க் ஸ்டார்" என்ற அமெரிக்க வர்த்தகக்கப்பல் முழுகடிக்கப்பட்டதைப்பற்றி பிரஸ்தாபிக்கும்போது இந்த விஷயத்தை அவர் தெரிவித்தார்.

"பிங்க் ஸ்டார்" என்ற கப்பல், கிரீன்லாந்தில் உள்ள பேர்வெல் முனைக்கு 275 மைல் வடகிழக்கில் ஒரு நீர் முழுகிக்கப்பலால் ('சப்மரீனால்') முழுகடிக்கப்பட்டது. அந்தக்கப்பலில் இருந்து தப்பிப் பிழைத்தவர்கள் 23 பேர் ஐஸ்லாந்தில் உள்ள ரெயிக்ஜாவிக் என்ற இடத்திற்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

அட்லாண்டிக் கடலிலிருந்து ஐஸ்லாந்து வரைக்கும் அமெரிக்க வியாபாரக் கப்பல்கள் போகும் பாதையில் எதிரி யுத்தக்கப்பல்களாவது அல்லது நீர் முழுகிக் கப்பல்களாவது அகப்பட்டால், அவைகள் உடனே சுடப்படும் என்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் முன்பு எச்சரிக்கை செய்திருந்தார். அந்த எச்சரிக்கையை மீறி ஜெர்மனி "பிங்க் ஸ்டாரை" முழுகடித்திருக்கிறதா அல்லது அமெரிக்கக்கப்பல் என்று தெரியாமல் முழுகடித்திருக்கிறதா என்ற விஷயம் விளக்கமாகத்தெரியவில்லை

இனிமேல் அமெரிக்க வர்த்தகக்கப்பல்களில் பாதுகாப்புக்காக பீரங்கிகள் வைக்கப்படும் என்றும், பதிவு செய்யப்பட்ட அயல்நாட்டுக் கப்பல்களுக்கும் அமெரிக்கா பீரங்கிகள் கொடுக்கலாம் என்றும் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் சொன்னார். ஆனால் இதற்குத் தடையாக இருப்பது நடுநிலைமைச் சட்டமென்றும், அந்த சட்டத்தை ரத்து செய்வதன் சம்பந்தமாக அடுத்தவாரம் அமெரிக்க அரசாங்கம் முடிவு செய்யுமென்றும் பிரசிடெண்ட் அறிவித்தார்.

நடுநிலைமைச் சட்டத்தை ரத்து செய்வதைப்பற்றி ஆதரித்து அமெரிக்க அரசியல் மந்திரி, மிஸ்டர் கார்டெல் ஹல்லும், அமெரிக்கக் கடற்படை மந்திரி, கர்னல் நாக்ஸும் பேசியிருக்கிறார்கள். இதைப் பற்றிய விவரங்கள் 1-ம் பக்கத்திலிருக்கும் கட்டுரையில் காண்க.

4. ரஷ்யாவும், பின்லாந்தும்.

ரஷ்யாவில் சென்ற மூன்று மாதங்களாக நடந்து வரும் யுத்தத்தைப்பற்றி, லண்டனில் இருக்கும் ரஷ்ய ஸ்தானீகர், மிஸ்டர் மெய்ஸ்கி, செவ்வாய்க் கிழமை செய்த பிரசங்கத்தில் சில விஷயங்களை விவரித்துக்கூறினார். அவருடைய பிரசங்கத்தில் குறிப்பிட்ட விஷயங்கள் பின்வருமாறு :—

ரஷ்ய யுத்தத்தில், 30 லக்ஷம் ஜெர்மானியர்கள் கொல்லப்பட்டார்கள். 8,500 ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப்பட்டன. ஜெர்மனியின் முழு பட்டாளத்தில் மூன்றில் ஒரு பாகம் ரஷ்யாவில் போர் புரிகிறது. ரஷ்யா தனக்காக மாத்திரம் சண்டை போட

வில்லை. மற்ற நாடுகளின் சுதந்தரத்துக்காகவும், அமைதிக்காகவும் சண்டை போட்டுக்கொண்டு வருகிறது. மனித சமூகத்தின் எதிர்கால வாழ்வு, லெனின்கிராடைச் சுற்றி நடக்கும் சண்டையையும், யூக்ரெயின் மாகாணத்தில் நடக்கும் சண்டையையும் பொறுத்திருக்கிறது.

அநேக உலக தந்திர வாதிகள், மழைக்காலம் வந்து விட்டால், யுத்தத்தில் ரஷ்யா வெற்றி பெற்றுவிடும் என்று நினைக்கிறார்கள். இதுபோன்ற சாவதானமான மனப்பான்மை மிகவும் அபாயகரமானது. ஹிட்லர் போட்ட திட்டத்தின்படி காரியம் நடக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் ஜெர்மனியினுடைய யுத்த யந்திரம் இன்னும் பலம் பொருந்தியதாக இருக்கிறதென்பதை ரஷ்யர்கள் அறிவார்கள். உள்ள நிலைமை இன்னதென்று தெரிந்து கொள்ளாமல் கண்ணை மூடிக்கொண்டு இருப்பதில் யாதொரு பிரயோசனமும் இல்லை. மழைக்காலம் வந்தாலும்கூட நவீனமுறையில் நடத்தப்படும் போருக்கு பெருந்தடை ஒன்றும் உண்டாகாது. ரஷ்ய மக்கள் மழைக்காலத்தை நம்பிக்கொண்டு இல்லை.

ரஷ்யர்கள்கூட இதுவரைக்கும் பெரிய நஷ்டமடைந்திருக்கிறார்கள். ரஷ்யாவில் உள்ள முக்கியமான தொழிற்சாலைகள் நிறைந்த ஜில்லாக்கள் ஜெர்மனியர்களால் கைப்பற்றப்பட்டன. புதிய இடங்களில் அத்தொழில்களை ஆரம்பிப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இழந்துபோன யுத்த சாமான்களைச் சரிக்கட்டுவது இதனால் சற்று கஷ்டமாயிருக்கும். இந்த சந்தர்ப்பத்தில் சுதந்தரத்தை விரும்பும் நாடுகள் எல்லாம் யுத்த சாமான்களை அனுப்பி உதவி செய்யலாம். இந்த உதவியை எதிர்ப்பார்ப்பதற்கு ரஷ்ய மக்களுக்கு உரிமை இருக்கிறது. அவர்கள் தங்களுடைய நாட்டைப் பாதுகாப்பதோடு அல்லாமல், உலகத்திலுள்ள நாடுகளின் சுதந்தரத்துக்காகவும் தைரியமாகப் போராடிக்கொண்டு வருகிறார்கள். ரஷ்யாவுக்கு ஆகாய விமானங்களும், ‘டாங்கிகளும்’ அனுப்பி உதவி செய்யும் நாடுகள், தங்களைக் காப்பாற்றிக்கொள்ளுகின்றன என்பதை அறியவேண்டும். ரஷ்யர்கள் தங்களுடைய உடம்பில் கடைசிச்சொட்டு ரத்தம் இருக்கும் வரை, ஜெர்மனியின் நாஸிக்கொள்கையை எதிர்த்து கடுமையாகப் போர் புரிவார்கள்.

உலக மக்களுக்குள் சகோதரத்துவமும், நேசமும் இருக்கவேண்டுமென்று ரஷ்யா விரும்புகிறது. அந்தந்த நாட்டுமக்கள் தங்களுடைய அரசியல் திட்டத்தைத் தாங்களே நிர்ணயிக்கவேண்டுமென்ற கொள்கையை ரஷ்யா கொண்டிருக்கிறது. அதன்படி ரஷ்யக்குடியரசாட்சியின்கீழ் உள்ள பல நாடுகளும், சகல சுதந்தரமும் கொண்டு, தம்தம், தேசீய முன்னேற்றத்துக்காக வேண்டிய காரியங்களைச் செய்யலாம். உள்நாட்டு அமைதி சம்பந்தமான எல்லா விஷயங்களும் அந்தந்த நாடே கவனித்துக்கொள்ளவேண்டியது.

மத சம்பந்தமான விஷயங்களிலும், சகல சுதந்தரமும் அளிக்கப்பட்டிருக்கிறது. மதம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் தனிப்பட்ட விஷயம் என்று ரஷ்யா கருதுகிறது. எந்த மதமாவது, மதத்தினராவது ரஷ்யாவில் தொந்தரவு கொடுக்கப்படுவதேயில்லை. இதைப்பற்றி வெளியில் தவறான அபிப்பிராயம் இருக்கிறது. ஒவ்வொரு ரஷ்யனும், அவன் அல்லது அவளுடைய மனச்சாட்சிக்குந்தக்கவாறு எந்த மதத்தில் வேண்டுமானாலும் நம்பிக்கை கொள்ளலாம். ஸ்டாலின் அரசியல் திட்டத்தின் 124-வது பிரிவு ரஷ்ய மக்களுக்கு பூரண மத சுதந்தரம் கொடுக்கிறது ; மதசம்பந்தமான வழிபாட்டுக்கும், மதத்துக்கு விரோதமான பிரசாரத்துக்கும் சகல சுதந்தரமும் உண்டு.

1940-ம் ௵ 30,000 மத வகுப்புகளைச்சேர்ந்த கூட்டங்கள் இருந்தன. 8,000 மாதாகோவில்களும், 60,000 பாதிரிமார்களும் இருந்தார்கள். அதன் விஷயத்தில் நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் மாதாகோவில்களில் நடக்கும் தொழுகைக்குச் செல்லலாம் ; அங்கு கலியாண சடங்குகள் செய்து கொள்ளலாம், தங்களுடைய குழந்தைகளுக்குப் பெயர் வைக்கலாம். ரஷ்ய அரசாங்கம் எந்த ஒரு தனிப்பட்ட மதத்தையும் ஆதரிப்பதில்லை. எல்லா மதஸ்தாபனங்களுக்கும் வாடகையில்லாமல் கட்டடங்கள் விடப்பட்டிருக்கின்றன. தொழுகைக்காக உபயோகப்படுத்தப்படும் கட்டடங்கள்மேல் ரஷ்ய அரசாங்கம் யாதொரு வரியும் விதிப்பதில்லை. மத நம்பிக்கை கொண்டிருப்பவர்களின் உரிமைகளைக் கெடுப்பவர்கள் ரஷ்யக் கோர்ட்டுகளில் தண்டிக்கப்படுவார்கள். கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டு முக்கிய பாகுபாடுகளாக வசித்து வருகிறார்கள் ; “பழைய மாதாகோவிலைச் சேர்ந்தவர்கள்” ஒரு பகுதி, “புதிய மாதா கோவிலைச் சேர்ந்தவர்கள்” மற்றொரு பகுதி. பழைய மதத்தைச சேர்ந்தவர்களின் மதப் பிரசாரம் இதர நாடுகளில், முக்கியமாக அமெரிக்காவில் பரவியிருக்கிறது. பொதுவாக, மத விஷயத்தில் யாருக்கும் யாதொரு தடையும் அரசாங்கத்தால் கிடையாது.

மேலே குறிப்பிட்ட விவரங்கள், ரஷ்ய ஸ்தானீகர், மிஸ்டர் மெய்ஸ்கி, லண்டனில் செய்த பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்டன.

பிரிட்டிஷ் பத்திரிகைகள், மிஸ்டர் மெய்ஸ்கியின் பிரசங்கத்தைப் பாராட்டி, தலையங்கங்கள் எழுதியிருக்கின்றன. “டெய்லி டெலிகிராப்” என்ற பத்திரிகை மிஸ்டர் மெய்ஸ்கி ஹிட்லரிசத்தைக் கண்டித்துக் கூறியதைக்குறிப்பிட்டிருக்கிறது. மிஸ்டர் மெய்ஸ்கி கூறியதாவது :—

“ஹிட்லரிசம் என்பது நவீன ‘ப்ளேக்’ நோய். அதற்கு எல்லை வரையறை கிடையாது; அந்த நோயிலிருந்து விடுதலை கிடையாது. அதனுடைய மூலாதாரத்தை அடியோடு அழித்துவிட்டாலொழிய அது உலக முழுவதும் தொத்திக்கொள்ளும்.

“யார்க்ஷைர் போஸ்டு” என்ற பத்திரிகை, பிரிட்டனுடைய பாதுகாப்புகளை எந்த விதத்திலும் குறைக்கக்கூடாது என்று கூறிவிட்டு மேலும் எழுதுவதாவது :—

“பிற்காலத்தில் எப்போதோ ஜெர்மனிக்கு எதிராக ஒரு தரைப் படையெடுப்பு வேண்டியிருக்கும் என்ற காரணத்தை வைத்துக்கொண்டு, ரஷ்யாவுக்கு அவசியமாக வேண்டியிருக்கும் யுத்த சாமான்களை நாம் சேர்த்து வைத்துக்கொண்டிருப்பது மடமையாகும். இப்போது ரஷ்யாவில் ஒரு நெருக்கடியான யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. கொள்கையளவில் அதை நம்முடைய யுத்தமாக நாம் கருதுகிறோம். செய்கையளவிலும், நாம் அதை நம்முடைய யுத்தமாகவே கருதவேண்டும்.”

லண்டன் “டைம்ஸ்” பத்திரிகை எழுதுவதாவது :—

“நிலைமை உண்மையில் நெருக்கடியாய்த்தான் இருக்கிறது. ஒவ்வொருநாளும் ரஷ்யாவுக்கு வேண்டிய யுத்த சாமான்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. ஆனால் வெளியில் தெரிந்திருப்பதற்கு மேல் ஏராளமான சாமான்கள் ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டும் வருகிறது.”

சென்ற வாரத்தில், யூக்ரெயின் மாகாணத்தின் தலை நகரமாகிய கீயப் என்ற இடத்தை ஞாயிற்றுக்கிழமையன்று (செப்டம்பர் ௴ 21-ந் தேதி) ஜெர்மானியர்கள் கைப்பற்றிவிட்டார்கள். ஜெர்மானியர்கள் கைப்பற்றுவதற்குமுன், ஸ்டாலினுடைய “கரிந்த பூமி”க்கொள்கை கையாளப்பட்டது. எதிரிகளுக்கு உபயோகமாகும் எல்லா சாமான்களும் அழித்து நாசமாக்கப்பட்டன. சாமான் ‘சப்ளை’ வைத்திருந்த இடங்களெல்லாம் வெடிகுண்டு மருந்து வைத்து கொளுத்தப்பட்டன. தண்ணீர் குழாய் யந்திர சாலைகளும், மின்சார யந்திர சாலைகளும், ரயில்வேக்களும், பாலங்களும் அழிக்கப்பட்டன. அங்குள்ள மக்களுக்கு உணவுப்பொருள்கள் கூட இல்லாமல் எல்லாவற்றையும் அழித்துவிட்டார்கள் என்று ஜெர்மானியர்கள் குறை கூறுகிறார்கள்.

லெனின் கிராட், ஒடெஸ்ஸா என்ற இரண்டு பிரதேசங்களிலும் ஜெர்மன் துருப்புகள் பின் தள்ளப்பட்டன.

வாலமோ என்ற பட்டணத்தை ரஷ்யர்கள் ‘காலி’ செய்து விட்டதாக, பின்லாந்தியர்கள் கூறுகிறார்கள்.

பின்லாந்துக்கு பிரிட்டன் ஒரு எச்சரிக்கை செய்திருக்கிறது. ரஷ்யாவுக்குச் சொந்தமான பிரதேசங்களில் பின்லாந்து துருப்புகள் சண்டை செய்தால்,

பிரிட்டன் பின்லாந்தைத் தனக்கு விரோத நாடாகக் கருதும். தன்னுடைய எல்லைக்கு அப்பால் சண்டையை நிறுத்திவிட்டால் ரஷ்யாவுக்கும் பின்லாந்துக்கும் உள்ள நிலைமையை நல்ல நிலைமையாக ஆக்க முயற்சி செய்யலாம் என்று பிரிட்டன் கூறியிருக்கிறது. ரஷ்யாவுடன் கலந்து ஆலோசித்த பிறகு தான் இந்த செய்தி அனுப்பப்பட்டதென்று தெரிகிறது.

5. பால்கன்ஸ், துருக்கி, இரான் முதலியன.

பால்கன் தீபகற்பத்திலுள்ள பல்கேரியாவை யுத்தத்தில் சேரும்படி ஜெர்மனி மிகவும் கட்டாயப் படுத்திக்கொண்டு வருகிறது. வெகு சீக்கிரம் பல்கேரியா, ஜெர்மனிக்கு உதவியாகவும் ரஷ்யாவுக்கு விரோதமாகவும் யுத்தத்தில் இறங்கும் என்று தெரிகிறது. பல்கேரிய அரசர் பாரிஸ், ஹிட்லரைப் பார்ப்பதற்காகச் சென்றிருக்கிறார். ஆனால் பல்கேரிய குடியானவர்கள் ரஷ்யாவுடன் சண்டை போடக் கூடாது என்ற உணர்ச்சியுடன் இருக்கிறார்கள். நாட்டில் அரசாங்கத்துக்கு விரோதமான மனப்பான்மை அதிகரித்து வருகிறது.

பல்கேரியாவிலிருந்து வரும் பிரயாணிகள், அந்த நாட்டில் யுத்த எற்பாடுகள் மும்முரமாக நடக்கின்றன என்று சொல்கிறார்கள். பல்கேரியாவிலுள்ள ரயில் வேக்களை ஜெர்மானியர்கள் ஸ்வாதீனப்படுத்திக் கொண்டு தங்களுக்காக உபயோகப்படுத்திக்கொண்டார்கள். பல்கேரியாவில் உள்ள அயல் நாட்டினர்களை ஜெர்மன் ரகசியப் போலீஸ்காரர்கள் கவனித்துக்கொண்டு வருகிறார்கள்.

இரானின் பழைய அரசரை நியாய விசாரணை செய்யவேண்டுமென்று இரானிய சட்டசபை கேட்டிருக்கிறது. இஸ்பாகன் என்ற இடத்தில் தான் இருக்கும் வீட்டில் பழைய அரசர் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். 50 லட்சம் பவுனை அமெரிக்காவிலும், அதைவிட அதிகமான ஒரு தொகையைப் பிரிட்டனின் பாங்கிகளிலும் அவர் போட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பின்னால் வந்த ஒரு செய்தி அவர் கர்மானை விட்டு, தென் அமெரிக்காவிலுள்ள அர்ஜெண்டைன் நாட்டிற்குச் சென்றுவிட்டார் என்று கூறுகிறது.

இரானிய முதல் மந்திரி, மிஸ்டர் பருகி, புதிய மந்திரி சபையை அமைத்திருக்கிறார். பழைய சட்டங்களைத் திருத்தவும், புதிய அரசியல் திட்டம் அமைக்கவும், பல கமிட்டிகள் ஏற்படுத்தப்படுமென்றும் அவைகளால் பல சீர்திருத்தங்கள் செய்யப்படுமென்றும் தெரிகிறது.

6. கப்பல் நிலைமை.

ஒரு தென்னாப்பிரிக்க வைத்திய சிகிச்சைக் கப்பலை எதிரி விமானங்கள் தாக்கியதாக "சிட்னி மார்னிங் ஹெரால்டு" பத்திரிகை கூறுகிறது.

கருங்கடலில் "டாகிஸ்" என்ற ஜெர்மன் யுத்தக் கப்பல் ருமேனிய வர்த்தகக் கொடியைப் பறக்க விட்டுக்கொண்டு போகும்போது, ஒரு ரஷ்ய நீர் முழுகிக் கப்பல் அதை வெடி குண்டுகளினால் தாக்கி, பழுதாக்கிவிட்டது.

மத்திய தரைக்கடலின் மத்தியப் பிரதேசத்தில் நீர்க்குண்டுகளைக்கொண்டு சென்ற ஒரு இத்தாலியக் கப்பலை, ஒரு பிரிட்டிஷ் நீர்முழுகிக் கப்பல் தாக்கி நாசம் செய்துவிட்டது. அந்தப் பிரதேசத்தில் மற்றொரு எதிரி 'சப்ளை' கப்பல், தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டது.

7. தூரக்கிழக்கு அரங்கம்.

தெற்கு சீனாவில் ஹூனான் மாகாணத்தில், சீனத் துருப்புகளுக்கும், ஜப்பானியத் துருப்புகளுக்கும் ஒரு பெரிய சண்டை நடந்தது. 80,000 சிப்பாய்கள், 20 யுத்தக் கப்பல்கள், 200 'மோடார் லாரி' வண்டிகள், 100 ஆகாய விமானங்கள், இவைகளுடன் ஜப்பானியர்கள் சிண்ட்சியாங் ஆற்றைக்கடந்து, தெற்கு நோக்கிச் செல்ல ஆரம்பித்தார்கள். சென்ற சனிக்கிழமை (செப்டம்பர் மீ 20-ந் தேதி) மைலோ என்ற ஆற்றை அவர்கள் கடந்து சென்றார்கள். ஹூனான் மாகாணத்தில் தலைநகரமாகிய சாங்ஷாவுக்கு 50 மைல் தூரத்தில் அவர்கள் ஆற்றைக் கடந்தார்கள். தலைநகரத்தைக் கைப்பற்றவேண்டும் என்பதுதான் ஜப்பானியர்களின் நோக்கம்.

ஜப்பானியர்களைத் தடைசெய்வதற்கு, சீனர்கள் ஒரு தந்திரம் செய்தார்கள். ஜப்பானியத்துருப்புகள் முன்னேறி வருவதற்கு இடம்கொடுத்து, பிறகு அவைகளைப் பல இடங்களில் ஒரே சமயத்தில் தாக்குவது என்பதுதான் இந்தத்தந்திரம். சீனத் துருப்புகள் பின்வாங்கிக்கொண்டேசென்று மைலோ ஆற்றின் தெற்குக்கரையை அடைந்ததும், உடனே திரும்பி ஜப்பானியத்துருப்புகளை எதிர்த்துப் போராடின. கடுமையான சண்டை ஐந்துநாள் நடந்தது. ஜப்பானியர்களில் கொல்லப்பட்டும், காயப்படுத்தப்பட்டவர்களும் சேர்ந்து சுமார் 15,000 பேர் சேதம்.

மைலோ ஆற்றின் தெற்குக்கரையில் 10,000 பேர், வடக்குக்கரையில் 30,000 பேர், பிரத்தியேகமாக உள்ளவர்கள் 40,000 பேர், ஆக 80,000 ஜப்பானியர்கள் இருக்கிறார்கள். இப்போதுள்ள நிலைமை, ஜப்பானியர்களின் ஹூனான் சண்டையில் ஜப்பானியர்களின் முன்னேற்றம் சீனத்துருப்புகளால் தடைப்படுத்தப்பட்டது.

மைலோ ஆற்றின் தெற்குக்கரையில் உள்ள சீனத்துருப்புகளை வேறொரு பக்கத்திலிருந்து தாக்குவதற்காக, ஜப்பானியர்கள் சில கப்பல்களில் உதவித் துருப்புகள் அனுப்ப முயற்சித்தார்கள். இப்படி அனுப்பப்பட்ட ஐந்து பெரிய யுத்தக்கப்பல்களும், பத்து 'மோடார்' படகுகளும், ஜப்பானியத் துருப்புகளுடனும், யுத்தசாமான 'சப்ளை' களுடனும் துங்கிங் எரியில் போய்க்கொண்டிருக்கும்போது முழுகடிக்கப்பட்டன. ஆற்றங் கரையோரத்தில் துருப்புகளை இறக்க ஜப்பான் செய்த முயற்சிகள் பாழாக்கப்பட்டன.

தூரக்கிழக்கு அரங்கத்தில் நடக்கும் யுத்தம் இப்போது சீனாவுக்கு அனுகூலமாக இருக்கிறது என்று டாக்டர் வெல்லிங்டன் கூ, (லண்டனில் உள்ள சீன ஸ்தானீகர்,) ஒரு 'ரேடியோ' பிரசங்கத்தில் கூறினார். அவர் பேசியதன் சாரமாவது :—வடக்கில் மங்கோலியாவிலிருந்து, தெற்கில் சீனக் கடல் வரைக்கும், 2,000 மைல் தூர நீளத்தில் பல பகுதிகளில் சீன-ஜப்பான் யுத்தம் நடந்துவருகிறது. 50 மாதங்களாக சீனா ரத்த வெள்ளத்தில் புரண்டுகொண்டு இருக்கிறது. ஆனால் அதனுடைய தைரியம் மாத்திரம் குறையவில்லை ; இன்னும் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டே போகவேண்டுமென்று சீனா விரும்புகிறது. ஜப்பான் யுத்தத்தில் களைத்திருக்கிறது ; சீக்கிரத்தில் யுத்தத்தை முடித்துவிட வேண்டுமென்று ஆசைப்படுகிறது.

தன்னுடைய பிரசங்க முடிவில், சீனாவுக்கு இன்னும் அதிகமான யுத்த சாமான்கள் அனுப்பவேண்டுமென்று டாக்டர் வெல்லிங்டன் கூ வேண்டிக் கொண்டார்.

8. விஷி.

விஷி அரசாங்கத்தின் முதல் மந்திரியாகிய மார்ஷல் பீத்தானுடைய தலைமையில், மந்திரிசபைக் கூட்டம் கூடியது. இந்த மழைக்காலத்தில் பிரான்சில் நேரக்கூடிய பொருளாதாரக் கஷ்டங்களையும், சமுதாய கஷ்டங்களையும் தீர்ப்பது சம்பந்தமான பிரச்சினைகள் கவனிக்கப்பட்டன. இதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று அயல் நாட்டு மந்திரி, அட்மிரல் டார்லான் கூறினார்.

9. ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள்.

ஐரோப்பாவின் பலபாகங்களில், நாட்டு மக்கள் ஜெர்மனியர்களுக்கு விரோதமாகப் பல காரியங்கள் செய்து வருகிறார்கள்.

யூகோஸ்லாவியாவில் சாகரெப் என்ற பட்டணத்தில் ஒரு 'டெலிபோன்' மத்திய நிலையம் இருந்தது. சில குரோஷியர்கள் அதில் வெடிகுண்டு மருந்து வைத்துக்கொளுத்திவிட்டார்கள். நிலையம் சுக்குச் சுக்கலாய் வெடித்து நாசமாக்கப்பட்டது. அதைக் காவல் காத்துக்கொண்டிருந்த பல ஜெர்மன் சிப்பாய்களுக்கு அதிக காயம் உண்டாயிற்று. இதற்காக 50 குரோஷியர்கள் ஜெர்மானியர்களால் உடனே சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

பெல்ஜியத்தில் சென்ற செப்டெம்பர் மீ 17உ இரண்டு ஜெர்மன் போலீஸ்காரர்கள் கொல்லப்பட்டார்கள். 10 நாட்களுக்குள், கொன்றவர்கள் யார் என்று தெரிவிக்காமல் போனால், தூர்னே என்ற இடத்தில் பிணையாக இருக்கும் 25 பெல்ஜியர்கள் சுடப்படுவார்கள் என்று ஜெர்மானியர்கள் அறிவித்திருக்கிறார்கள். இனிமேல் ஜெர்மன் சிப்பாய்களுக்கு

எதிராகச் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் 5 பெல்ஜியர்கள் சுடப்படுவார்கள் என்று ஜெர்மனியர்கள் விளம்பரப்படுத்தி இருக்கிறார்கள்.

பிரான்சில் மூன்று பிரெஞ்சுக்காரர்கள் ஜெர்மானியர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். இதல்லாமல், பாரிசில் நான்கு பிரெஞ்சுக்காரர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. சில ஜெர்மன் சிப்பாய்களைத் தாக்கியதற்காக, 12 பேர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். ஒரு ஜெர்மன் பட்டாளத்தை சில பாரிஸ் நகரவாசிகள் சுட்டதாகவும், அந்த சிப்பாய்கள் அவர்களைத் திருப்பிச் சுட்டதாகவும் ஒரு ஸ்பானிஷ் ரேடியோ செய்தி கூறுகிறது. இதில் 5 பிரெஞ்சுக்காரர்கள் இறந்துபோய்விட்டார்கள்; அநேக ஜெர்மன் சிப்பாய்கள் காயமடைந்தார்கள்.

ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்சிலும், விஷி அரசாங்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் பிரான்சிலும், பொது மக்கள் ஜெர்மனிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். அடிக்கடி ராணுவக் கோர்ட்டுகளினால் பிரெஞ்சுக்காரர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.

ஹங்கேரியில் நூற்றுக்கணக்கான மக்கள் சிறைக்கொட்டடியில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். சாப்பாடு சம்பந்தமான உத்தரவுகளை மீறியதற்காக, அவர்கள் அடைக்கப்பட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையில் யுத்தத்தைப்பற்றி தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்ததற்காக அவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஜெர்மனி யுத்தத்தில் தோல்வியடையும் என்று சொல்பவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று ஹங்கேரிய அரசாங்கம் எச்சரிக்கை செய்திருக்கிறது. ஹங்கேரியில் உள்ள "நாஸி அம்புச்சிலுவைக் கட்சி"யில் பிளவு உண்டாயிருக்கிறது. மேஜர் சாலாசி என்ற தங்களுடைய பழைய தலைவரை விட்டுவிட்டு, அநேக அங்கத்தினர்கள் புதிய கட்சியை ஏற்படுத்தப் போகிறார்கள்.

ருமேனியாவில், ஜெர்மனிக்கு எதிராக புரட்சியும், கலகங்களும் நடக்கின்றன. ரயில்வேக்களை நாசம் செய்வது என்ற நோக்கத்துடன் பல ருமேனியர்கள் வேலை செய்கிறார்கள். அம்மாதிரி செய்பவர்கள் பிடித்தவுடனே மரணதண்டனை விதிக்கப்பட்டு கொல்லப்படுவார்கள் என்று ஒரு ருமேனிய அறிக்கை கூறுகிறது. போக்குவரவு சாதனங்களை அழிப்பதற்காக அநேக முயற்சிகள் செய்யப்பட்டனவென்றும், நாட்டில் புரட்சி ஏற்படுவதற்காகத் தூண்டுதல்கள் நடக்கின்றனவென்றும், அந்த அறிக்கைக் கூறுகிறது.

யூகோஸ்லாவியாவில், தேசியத் துருப்புகளுக்கும் அச்சு நாட்டு எதிரித் துருப்புகளுக்கும், மலைப்பிரதேசங்களில் சண்டை நடந்துகொண்டிருக்கிறது. ஏட்ரியாடிக் கரையோரத்தில் நடந்த கலகத்தில் 400 பேர் கொல்லப்பட்டார்கள்.

நார்வேயில் ஜெர்மானியர்களுடைய பயங்கர ஆட்சி கடுமையாக நடக்கிறது. நார்வேயின் தலைநகரமான ஆஸ்லோவிலும், அதற்கு வெளியிலும் உள்ள ஜெயில்களெல்லாம் கைது செய்யப்பட்ட பிரமுகர்களால் நிறைக்கப்பட்டிருக்கின்றன. தொழிற்கட்சி காரியதரிசி மிஸ்டர் பர்கார்டென், ஆஸ்லோ போலீசின் தலைவர், ஆஸ்லோ சர்வகலாசாலை உபாத்தியாயர்கள், இவர்களெல்லாம் கைது செய்யப்பட்டவர்களில் சிலர்.

நார்வேயின் தொழிற்சங்க நிர்வாகக் கமிட்டி தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதைக் கலைத்துவிட்டு ஜெர்மானியர்களுடைய கையாட்களை அக்கமிட்டிக்கு நியமித்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் தங்களுடைய கூலியை உயர்த்தவேண்டும் என்று கேட்கக்கூடாது. பெரிய தொழிற்சாலை ஸ்தாபனங்கள் ஜெர்மன் சிப்பாய்களால் பாதுகாக்கப்படுகின்றன. நார்வீஜியத் தொழிலாளர்கள் வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். செய்ய மறுத்தால் உடனே சுட்டுக்கொல்லப்படுகிறார்கள். ஆஸ்லோவில் உள்ள தொழிற்சாலைகளின் நிர்வாக அதிகாரிகளும் வியாபார ஸ்தாபனங்களின் நிர்வாக அதிகாரிகளும் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். அவர்களுக்குப் பதிலாக ஜெர்மனியின் கையாளான ஒருவர் எல்லா தொழிற்சாலைக்கும் நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவ்வளவு கொடுங்கோலாட்சியிலும் வேலை நிறுத்தங்களும் புரட்சிக்கூட்டங்களும் நடந்துவருகின்றன.

ஆஸ்லோவில் புதிதாக 300 பேர் கைது செய்யப்பட்டார்கள். பல இடங்களில் நார்வீஜிய மக்கள் கூட்டம் கூட்டமாக கைது செய்யப்படுகிறார்கள். ஆஸ்லோ சர்வ கலாசாலையின் அத்யட்சகர், டாக்டர் சீயப், ஜெர்மானியர்களால் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

நார்வேயை ஜெர்மானியர்களுக்குக் காட்டிக் கொடுத்த குஸ்லிங் கட்சியைச் சேர்ந்தவர்கள் தவிர, வேறு யாரும் 'ரேடியோ' வைத்திருக்கக்கூடாது. நார்வேயின் தலை நகரத்தில் சதா ஜெர்மன் சிப்பாய்கள் துப்பாக்கிகளுடன் உலாவிக்கொண்டே இருக்கிறார்கள்.

நார்வேயின் துரோகியும், ஜெர்மனியின் கையாளுமான மேஜர் குஸ்லிங், நார்வே பாங்கியிலிருந்து பெருந் தொகைகளை வாங்கி வெளி நாட்டுக்கு அனுப்பிவிட்டதாகத் தெரிகிறது. அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் அதே மாதிரி செய்திருக்கிறார்கள். இனிமேல் குஸ்லிங் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு, தங்களுடைய உத்தரவில்லாமல் பணம் கொடுக்கக்கூடாது என்று ஜெர்மானியர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

10. நடு நிலைமை நாடுகள்.

தாய்லாந்து (பர்மாவுக்கும், பிரெஞ்சு இண்டோ-சீனாவுக்கும் மத்தியில் உள்ள நாடு) தன்னுடைய அரசரின் 16-வது பிறந்தநாளைக் கொண்டாடிக்கொண்டு இருந்தது. நாட்டு மக்கள் எல்லோரும் மூன்று நாளாக விளையாட்டிலும், கேளிக்கையிலும் காலங் கழித்தார்கள். இந்த சமயத்தில் அவர்கள் திடுக்கிடும்படியான விஷயத்தை ரேடியோமூலம் கேட்டார்கள். அவர்களுடைய முதல் மந்திரி, தளகர்த்தர் லுவாங் பிபூல் சோங்கிராம், "எந்த நிமிஷமும் தாய்லாந்து யுத்தத்தில் அகப்படும்படியான நிலைமை ஏற்படும்" என்று எச்சரிக்கை செய்தார். இம்மாதிரியான செய்தியை அந்நாட்டு மக்கள் எதிர்பார்க்கவேயில்லை. நன்றாக விஷயம் அறிந்தவர்கள் கூட இந்த திடுக்கிடும்படியான செய்தியின் காரணத்தை அறியமுடியவில்லை என்று சொல்லப்படுகிறது.

குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றன்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.
[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.